வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 16.01.2025 வியாழக்கிழமை | இதழ் : 16 | பக்கங்கள் : 12


# புதிய அபிவிருத்தி யுகத்தை அடைய இலங்கையுடன் இணைந்து பயணம்!

## அநுரவிடம் கூறினார் சீன ஜனாதிபதி

பீஜிங், ஜனவரி 16

**அபிவிருத்தியின் புதிய யுகத்துக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.**

சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுப் பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

சீன மக்கள் மண்டபத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு, சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங் அமோக வரவேற்பளித்தார். மரியாதை வேட்டுக்களுடன்

11



## தமிழக மீனவர்கள் அறுவர் விடுதலை!

யாழ்ப்பாணம்,ஜன. 16

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் அறுவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் 8 ஆம் திகதி எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான மீனவர்கள் எண்மரில் அறுவரை ஊர்காவற்துறை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

மேலும் இருவருக்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் மீது எல்லை

11



## கனேடியத் தூதுவரை சந்தித்தார் சிறீதரன்!

கொழும்பு, ஜன. 16

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிற்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவருமான சிவஞானம்

11

## இலங்கை - சீனா இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தம்!

கொழும்பு, ஜன. 16

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

பொருளாதாரம், கல்வி, ஊடகம் மற்றும் கலாசாரத் துறைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தானதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சீனாவுக்கு 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வுக்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை - இந்திய உறவை மேலும் ஆழப்படுத்துவது குறித்து ஆராய்வு

புதுடில்லி, ஜன. 16

பாத் பைண்டர் பவுண்டேஷனின் ஸ்தாபகரும், இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான மிலிந்த மொறகொட இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

பாத் பைண்டர் பவுன்டேஷன் இந்தியாவுடன் பேணி வரும் நெருக்கமான தொடர்புகளின் ஓரங்கமாக அமைந்திருக்கும் இவ்விரு நாள் விஜயத்தின்போது, மிலிந்த மொறகொட இந்திய அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள், சிந்தனைக் குழுக்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரைச் சந்தித்து பரந்துபட்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி

11

## சர்வமதத் தலைவர்களின் பங்கேற்புடன் யாழில் இன, மத நல்லிணக்க பொங்கல்!



யாழ்ப்பாணம், ஜன. 16

தேசிய சமாதானப் பேரவை யின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்களும், சொண்ட் நிறுவனத்தினரும் இணைந்து நடத்திய தைப்பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் - சுண்டுக்குழியில் உள்ள சொண்ட் அலுவலகத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கேதீஸ்வரசர்மா குருக்களும், அருட்பணி. செ. என்ஸ்லி றொஷான்

11

## வடமராட்சியில் இருவரிடம் தொலைபேசி ஊடாக ரூ. 32 இலட்சம் பணம் கொள்ளை!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 16

வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் கடந்த 07 ஆம் திகதி இரண்டு இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

0740313003 என்னும் இலக்கத்தில் இருந்து தொடர்பு கொண்டு தனியார் தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்தின் சீட்டிழுப்பு மூலம் பணப்பரிசு

### மக்களே மிக அவதானம்

கிடைத்திருப்பதாகக் கூறி அவரின் வங்கிக் கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வங்கி கணக்கில் உள்ள தொலைபேசி இலக்கம் என்பவற்றை பெற்று கடவுச்சொற்களையும் அவரின் அறியாமையை பயன் படுத்தி பெற்று அதன் மூலம் இலங்கை வங்கிக் கணக்கின்

11

## 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வடக்கு - கிழக்கில் கனமழை பொழியும்!

யாழ்ப்பாணம்,ஜன. 16

எதிர்வரும் 17 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாக்குகின்றது. இந்த வளிமண்டல மேலடுக்கு சுழற்சியுடன் மேலைக் குழப்பமும், மேடன் யூலியன் அலையின் வருகையும் இருப்பதனால் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மிகக் கன மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் கலாநிதி நாகமுத்து

11

## காலநிலையை கருத்தில் எடுத்து அறுவடையில் ஈடுபடவேண்டும்!

### விவசாயிகளுக்கு வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன. 16

வடக்கு மாகாணத்தில் நெல்லை அறுவடை செய்யக்கூடிய விவசாயிகள் காலநிலை எதிர்வுகூறலை கருத்திலெடுத்து அறுவடை செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக தொடரும் சீரற்ற கால நிலை தொடர்பாக அவசர

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் விளையாடிய அரசின் முக்கிய விக்கெட்டுகள் சரிவு!

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஜன. 16

**டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை விளையாட வந்துள்ளதாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் கூறினாலும், முதல் 10 ஓவர்கள் முடிவில், அரசாங்கத்தின் பல விக்கெட்டுகள் விழுந்துவிட்டதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று எரிபொருள் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் அல்லது அரிசி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எதுவாக இருந்தாலும், இவை எதுவும் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை காணமுடிகின்றது.

"நாங்கள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை விளையாடுகிறோம்" என்று அரசாங்க அமைச்சர் ஒருவர் கூறியிருந்தார். முதல் பத்து ஓவர்கள் இப்போது முடிந்துவிட்டன. ஆனால் பல விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

தான் சொன்னதை நிரூபிக்கவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ முடியாத மிகவும் உதவியற்ற நிலையில் ஜனாதிபதி இருப்பதை நாம் காண்கிறோம். பிரதமர் மிகவும் உதவியற்ற சூழ்நிலையில் சிக்கியிருப்பது போல் தெரிகிறது.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மீண்டும் நாட்டு மக்களை ஏமாற்றி வருகிறார். பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்த அரசாங்கத்தின் மீது வலுவான செல்வாக்கைச் செலுத்தி மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் அரசாங்கம் விலையை குறைக்கத் தயாராக இல்லை. வாகன இறக்குமதியிலிருந்து 280 பில்லியன் வரிகளை வசூலிக்க சுங்கத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களிடமிருந்தே பெறப்படவுள்ளது.

தேர்தலுக்கு முன்பு அவர்கள் சொன்ன எல்லா விடயங்களுக்கும் பின்னரும் நாட்டில் மருந்து பற்றாக்குறை நீடிக்கின்றது. மருத்துவ மோசடி மீண்டும் நடக்கிறது. டெஸ்ட் போட்டியின் முதல் பத்து ஓவர்கள் விளையாடப்பட்டு விட்டன.

எவ்வாறாயினும், சரியான நேரம் வரும் போது நாட்டு மக்கள் சிறந்த முடிவுகளை எடுப்பார்கள். எனவே பொறுத்திருந்து பார்ப்போம். தேர்தலுக்கு முன்னதாக பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

மின்சாரக் கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைப்பதற்கும், வசூலிக்கப்படும் எரிபொருள் வரியை குறைப்பதற்கும் உறுதியளித்தனர். இவை எங்களுக்கு நன்றாக நினைவில் உள்ளன - என்றார்.

(அ)



# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வருடாந்த தைப்பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வருடாந்த தைப் பொங்கல் நிகழ்வு நேற்றுக் காலை 08. 30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக முன்றலில் மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் உள்ளிட்ட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ- 05)

# 590 மில்லியன் ரூபா வரியை செலுத்த தவறிய பெருந்தோட்ட நிறுவனங்கள்!

கொழும்பு, ஜன. 16

அரசாங்க நிலங்களை குத்தகைக்கு பெற்றுள்ள 23 பெருந்தோட்ட நிறுவனங்கள் கூட்டாக ரூ.590 மில்லியன் வரி செலுத்தத் தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அறிக்கையின்படி, மொத்தம் 249,843 ஹெக்டேர் அரசுக்குச் சொந்தமான நிலம் இந்த 23 நிறுவனங்களுக்கு 53 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குருநாகலை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமொன்று 2023 டிசம்பர் 31 திகதி வரை அரசாங்கத்திற்கு ரூ.320 மில்லியனுக்கும் அதிகமான வரியை செலுத்த வேண்டியுள்ளது. இந்தத் தொகையில் ரூ. 160 மில்லியனுக்கும் அதிகமான தொகை ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

இந்த நிறுவனம் அதன் வருடாந்த வரிகளை குறைவாக செலுத்தியுள்ளதுடன், நிறுவனத்தின் நிகர சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே இவ்வாறு வரியை செலுத்த முடியாதமைக்கான காரணமென குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

பெருந்தோட்ட அமைச்சு தொடர்பான தேசிய கணக்காய்வு அறிக்கையில் இந்த நிறுவனம் போன்று மேலும் பல நிறுவனங்கள் அரசுக்கு வரியை செலுத்துவதில் காலம் தாழ்த்திவருவதாக தெரியவந்துள்ளது.

(அ)

# அரிசி இறக்குமதி போர்வையில் அதிகளவு தானியங்கள் வந்தன!

## முன்னாள் விவசாய அமைச்சர்

கொழும்பு, ஜன. 16

நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த காலப் பகுதியில் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் அதிகளவில் பாஸ்மதி அரிசி, பயறு, வேர்க்கடலை மற்றும் உழுந்து ஆகியவை காணப்பட்டுள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

திட்டமிட்ட குழுவொன்று அரிசி கொள்கலன்களுக்கு இடையே ஏனைய தானியங்களை அதிகளவில் இறக்குமதி செய்துள்ளதாகவும் தற்போது அவற்றை அவர்களின் தொகை களஞ்சியசாலைகளில் மறைத்து வைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாஸ்மதி அரிசியை மாத்திரம் இறக்குமதி செய்யும்போது அரசாங்கம் அதிகளவு வரியை விதிப்பதால் நாட்டு அரிசியை இறக்குமதி செய்யும் பெயரில் 65 ரூபாய் வரியின் கீழ் பாரியளவு பாஸ்மதி அரிசியை நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் கூறினார்.

தற்போது சந்தையில் பாஸ்மதி அரிசி மாத்திரமன்றி பயறு, உழுந்து ஆகிய தானியங்களின் விலைகளில் சற்று வீழ்ச்சி காணப்படுவதற்கான காரணம் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட தொகையானது சந்தைக்கு விடுவிக்கப்பட்டமையே என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட அரிசித் தொகையானது பாரிய அளவிலான வர்த்தகர்கள் மூலம் மீள பொதியிடப்பட்டு அதிக விலைக்கு சந்தைக்கு வெளியிடப்பட்டு வருவதாக தெரிவித்த அவர் நாட்டில் அரிசி விநியோகத்தை அரசாங்கம் நிர்வகிக்கத் தவறிவிட்டதாகவும் கூறினார். (அ)

# இளைஞனை தேடும் நடவடிக்கை தீவிரம்

மன்னார், ஜன.16

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பிரதேசத்தில் மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போன நிலையில் குறித்த இளைஞனை தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் இணைந்து இளைஞனை தேடி வருகின்றனர். குறித்த இளைஞன் காணாமல் போனமை குறித்து மடு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மடு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் குறித்த இளைஞன் நீராடச் சென்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் தேடுதல்களை மேற்கொண்டனர்.

எனினும் இதுவரை குறித்த இளைஞன் மீட்கப்படவில்லை.

புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசின் இயலாமையே இன்று வெளிப்படுகிறது

## கூறுகிறார் சஞ்ஜீவ எதிரிமன்ன

கொழும்பு, ஜன. 16

சீனத்திட்டங்கள் தொடர்பில் தேர்தல் மேடைகளில் கூறிய விடயங்களை சீனாவில் கூறவேண்டாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமன்ன ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீன விஜயம் சிறப்பாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை, கொழும்பு துறைமுக நகர திட்டம் மற்றும் சீனாவிடம் பெற்ற கடன் மற்றும் நாட்டில் முன்னெடுக்கப்படும் சீன ஒத்துழைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அரசியல் மேடைகளில் தெரிவித்த கருத்துக்களை சீனாவில் சென்று கூற வேண்டாம் என ஜனாதிபதிக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். பீஜிங்கில் அதுதொடர்பில் சிறிதளவும் பேச வேண்டாம் என்றே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த அரசாங்கத்திற்கு சிறந்த ஆட்சியை நடத்தக்கூடிய நிலை காணப்படுகின்றது. காரணம் இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் அரசியல் குழப்பம் எதுவும் இல்லை. அது மாத்திரமல்ல நாட்டினுள் யுத்த நிலையொன்றும் கூட இல்லை. அதேவேளை, கொவிட் தொற்று போன்ற பாரிய நோய் நிலை நெருக்கடிகளும் இல்லை. மக்கள் எதிர்ப்புக்களும் இல்லை. இத்தகைய நிலையில் அரசாங்கம் நாட்டு மக்களுக்காக மேற்கொண்டுள்ள நன்மை பயக்கும் விடயங்கள் தொடர்பில் ஐந்து வசனம் ஏனும் எழுதக்கூடிய நிலை நாட்டில் இல்லை என்றே கூறமுடியும். அரசாங்கத்தின் இயலாமையே வெளிப்படுகின்றது. அனுபவம் அற்றவர்கள் ஆட்சியை கொண்டு நடத்தும் விதமே வெளிப்படுகின்றது - என்றார். (அ)

# கொழும்புத் துறைமுக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் கரப்பான் பூச்சி

கொழும்பு, ஜன. 16

இலங்கை துறைமுக அதிகாரசபையால் நடத்தப்படும் கொழும்பு துறைமுக ஊழியர்கள், சமையலறையில் இருந்த உணவில் கரப்பான் பூச்சி இருந்ததாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

கிழக்கு கொள்கலன் முனையத்தின் ஊழியர்கள், 12 ஆம் திகதி இரவு சமையலறையிலிருந்து பெறப்பட்ட உணவுப் பொட்டலத்தில் கரப்பான் பூச்சி இருந்ததாகவும் தெரிவித்தனர்.

கொழும்புத் துறைமுக சமையலறையில் உணவு, அதன் நிர்வாகம் மற்றும் தரம் ஆகியவற்றில் கடுமையான சிக்கல் இருப்பதாகவும், அண்மையில் உணவில் மாபிள் துண்டொன்று உணவில் காணப்பட்டதாகவும் ஊழியர்கள் கூறினர்.

மருத்துவர்களை உள்ளடக்கிய ஒரு குழு சமையலறையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து உணவு சமையல் குறிப்புகளைத் தயாரித்தாலும், சில தொழிற்சங்கங்களின் செல்வாக்கால் அதிகாரிகளும் ஊழியர்களும் சமீபத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஊழியர்களின் அழுத்தம் காரணமாக உணவுப் பாதுகாப்பு குறைந்துள்ளதாகவும் ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu
15.01.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நீண்டகால கைதிகள் விவகாரம்

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ் சூழலில் அவ்வப்போது குரல் எழுப்பப்படுவதுண்டு. ஆனால், அரசாங்கமோ, அரசியல் கைதிகள் என்னும் பிரிவினர் இலங்கையில் இல்லை என்னும் கொள்கை நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வந்திருக்கின்றது எனினும் நீண்டகாலமாக விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். அந்த வகையில் எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இது தொடர்பில் கையெழுத்து சேகரிக்கும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது. இவ்வாறானதொரு சூழலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார அரசியல் கைதிகள் எவரையும் தாம் தடுத்து வைத்திருக்கவில்லை என்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள்தான் இருக்கின்றனர் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து இவ்வாறான பல விடயங்களை கையாளும் பொறிமுறையொன்றைப் பற்றி தமிழ் அரசியல் தலைமைகள் சிந்தித்து. செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செயற்படவில்லை. வரமுடியாத அரசியல் தீர்வு தொடர்பில் பேசி காலத்தை விரயம் செய்ததைத் தவிர, வேறு எதனையும் தமிழ் கட்சிகள் செய்திருக்கவில்லை. இறுதியில் அரசியல் தீர்வும் இல்லை அரசியல் கைதிகள் மற்றும் ஏனைய பல பிரச்னைகளுக்கும் தீர்வு இல்லை என்னும் நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

ஒப்பீட்டடிப்படையில் ரணில் - மைத்திரி காலம் அரசியல் ரீதியில் சாதகமான வாய்ப்புக்களை வழங்கியிருந்தது. இந்தக் காலத்தில், நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளின் பிரச்னையை முற்றிலுமாக தீர்த்திருக்க முடியும் ஆனால், புதிய அரசியல் யாப்பு என்னும் மாய மானுக்குப் பின்னால் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் அணியினர் இழுப்பட்டுச் சென்றனர். அதன் சாத்தியமின்மை தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அவர்கள் பொருட்படுத்தியிருக்கவில்லை.

அரசியல் கைதிகள் என்பது ஒரு தமிழ் அரசியல் புரிதலேயன்றி, அதற்கான அரசியல் அங்கீகாரத்தை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஒரு வேளை அரசியல் கைதிகள் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக நீண்டகாலமாக விசாரணைகளின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்னும் கோரிக்கையை அழுத்திக் குறிப்பிட்டிருந்தால், ஒரு வேளை இந்த விடயம் இந்தளவு இழுப்பட்டுச் செல்வதற்கான வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம் ஏனெனில், அரசியல் கைதிகள் என்று அழுத்திக் குறிப்பிடும் போது, அதனை கொள்கையளவில் எதிர்த்து நிற்கும் அரசாங்கம் இந்த விடயத்தை கையாள்வதில் தயக்கம் காண்பிக்கும். அத்துடன், தங்களுக்கு அரசியல் ரீதியில் நெருக்கடி ஏற்படுமென்றால், இதனை தட்டிக் கழிக்கவும் செய்யும். எனவே, இதில் அரசாங்கத்தை விடவும் தமிழர் தரப்புக்களுக்கே அதிக பொறுப்புண்டு. ஏனெனில் அரசாங்கத்தை பொறுத்தவரையில் இதனை தட்டிக்கழிப்பதால் அவர்களுக்கு எந்தவொரு பிரச்னையும் ஏற்படப் போவதில்லை. ஆனால், சிறையில் பல வருடங்களாக அடைபட்டுக் கிடக்கும் கைதிகளின் வாழ்வுதான் தொடர்ந்தும் இருளுக்குள் தள்ளப்படும். அவர்களுக்கு ஒரு விடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடப்பாடு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது பொறுப்புமாகும். எனவே இந்த விடயத்தை அரசியல் ரீதியில் நோக்குவதை விடவும், மனிதாபிமான நோக்கில் அணுகுவதே சரியானது.

# யாழ். கலாசார மண்டபத்தில் நாளை கலா ரசனாவின் 'சங்கமம்' நிகழ்ச்சி

## பிரபல இசைக்கலைஞர் பாலக்காடு சிறீராம் பங்கேற்பு







யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ். கலாசார மண்டபத்தில் நாளைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் லண்டன் 'கலா ரசனா'வின் 'சங்கமம்' நிகழ்ச்சியில், இந்தியாவின் பிரபல இசைக்கலைஞர் பாலக்காடு சிறீராம் கலந்துகொள்கிறார்.

மாலை 04: 30 மணிக்கு இவருடைய இசைக்கச்சேரி நடைபெறுகிறது. பக்கல ராமதாஸ் - வயலின். ஏ.ஸ். ரங்கநாதன் மிருதங்கம்.

சிறந்த புல்லாங்குழல் கலைஞரான பாலக்காடு சிறீராம், கர்நாடக 'கீ போர்ட்' இசையிலும் வல்லவர். ஏ. ஆர். ரஹ்மான், இளையராஜா, யுவன் சங்கர் ராஜா முதலான இசையமைப்பாளர்களின் இசையமைப்பில் பிரபலமான பல திரைப்பாடல்களை பாடியவர். 'படையப்பா' திரைப்படத்தின், 'வெற்றிக் கொடி கட்டு...' இவருடைய பாடல்.

'சங்கமம்' நிகழ்ச்சியில் நாளை மறுதினம் சனிக்கிழமை இரண்டு நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாலை 04:30 மணிக்கு அமெரிக்காவில் வசிக்கும் ஈழத்து நடனக் கலைஞரான கலைமகள் சந்திரசேகரம் அளிக்கும் 'சங்கமும் சுனாமியும்' என்ற ஓரங்க நாட்டிய நாடகம், சங்க இலக்கிய பாடல்களை மையமாக்கி தமிழர்களின் இன்றைய வாழ்வியலை காண்கிறது.

பொறியியலாளரான கலைமகள் சந்திரசேகரம், ஹவாட் பல்கலைக்கழக பட்டதாரி. பரதநாட்டியத்தின் பஞ்சநடை தாள முறைமை தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டவர். கொக்குவில் 'கலாபவனம்' சுப்பையா மாஸ்ரரிடம் தனது நடன கற்கையை ஆரம்பித்த கலைமகள், ஹேமா ராஜகோபாலன், டாக்டர் பத்மா சுப்ரமண்யம் ஆகியோரிடம் பயின்றவர்.

சங்கமும் சுனாமியும் நிகழ்வைத் தொடர்ந்து, கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் அளிக்கும் 'மனம் சுமந்த வலிகள்' நாட்டிய நாடகம் நடைபெறுகிறது. பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையிலான இந்த நாட்டிய நாடகத்தில் முப்பது பேருக்கு மேற்பட்டோர் பங்குபற்றுகின்றனர். தமிழர்களுடைய வாழ்வியல் இன்பங்களையும் அதில் சூழ்ந்த அவலங்களையும் தத்ரூபமாக காண்பிக்கும் ஓர் உன்னதமான படைப்பு இது.

புலம்பெயர்ந்த நாடுகளிலும் தாய்நாட்டிலும் இசை, நடன துறையில் ஆளுமை கொண்ட இளம் தலைமுறையினரை ஒரு மேடையில் ஒருங்கிணைத்து, அதன்மூலம் ஓர் இன உணர்வுப் பேணலை வலுப்படுத்தும் நோக்கில் லண்டனின் 'கலா ரசனா' யாழ். கலாசார மண்டபத்தில் ஆண்டுக்கு இரு தடவைகள் இச் சங்கமம் நிகழ்வை நடத்துகிறது.

(எ)

# கிளிநொச்சியில் தைப்பொங்கல் விழா



கிளிநொச்சி, ஜன.16

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தைப்பொங்கல் விழா நேற்றுக் காலை நடைபெற்றது. மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், மாவட்ட செயலக முன்றலில் இந்த பொங்கல் விழா நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புதுவேலை கிடைக்கும். வாகன வசதி பெருகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்**
பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வாகனத்தை சீர் செய்வீர்கள். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். முன்னேறும் நாள்.

**கன்னி**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள்.

**துலாம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்**
நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். கடன் வாங்காதீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அக்கம்-பக்கம் இருப்பவர்களின் அன்புத் தொல்லை குறையும்.

# வவுனியாவில் பக்தி பாடல்கள் இசைக்க பொலிஸார் பொங்கல் கொண்டாட்டம்

*வவுனியா, ஜன.16*

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்கள் இசைக்க மழைக்கு மத்தியிலும் தைப்பொங்கல் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்புக் குழுவினரின் பங்களிப்புடன் சிறப்பான முறையில் புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல் நடைபெற்றது.

இப்பொங்கல் நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண, வவுனியா தலைமைப்



பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா பிரதேசங்களை சேர்ந்த சமுதாய பொலிஸ் பிரிவின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# யாழில் பௌத்த சின்னங்களுடன் நேற்று கரையொதுங்கிய மர்மவீடு

*யாழ்ப்பாணம், ஜன.16*

யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற் கரையில் மர்ம வீடு ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 03.00 மணியளவில் இடம்பெற்றது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அண்மைக் காலமாக கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல், நில நடுக்கம் போன்றன ஏற்பட்டன. இந்த நிலையில், மியன்மார், தாய்வான்,



தாய்லாந்து, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இந்த மர்ம வீடு வந்திருக்கலாம் சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த வீட்டில் பௌத்த மதம் சார்ந்த மரபு அம் சங்கள் இருப்பதாக மக்கள் கூறினர். இந்த நிலையில், குறித்த வீட்டினை ஏராளமான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (எ-2)

# இணுவிலில் சிறார்களின் கலைவிழா

*யாழ்ப்பாணம், ஜன.16*

இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் கலைவிழா இணுவில் பொதுநூலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் த. முகுந்தனும், சிறப்பு விருந்தினர்களாக டிப்ளோமா கற்கைநெறிகள் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பகுதித் தலைவர் பொ. ஜெனார்த்தனனும், மென்பொறியியலாளர் இராகவனும் கலந்து கொண்டனர். இதன்




போது, மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# பொருளாதார மையங்களை இயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் சர்வதேச இந்துமத பீடம் கோரிக்கை

*யாழ்ப்பாணம்,ஜன.16*

வடக்கில் இயங்காமல் உள்ள பொருளாதார மையங்களை இயக்குவதற்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சர்வதேச இந்துமத பீடம் சார்பில் அதன் செயலாளர் சிவசிறீ இராமச்சந்திரகுருக்கள் பாபுசர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் பொருளாதார மைய நிலையங்கள் வவுனியாவிலும் மட்டுவிலிலும் பல கோடிக்கணக்கான ரூபாயில் அமைக்கப்பட்டன.

ஆனால், இந்த பொருளாதார மையங்கள் இயங்காமல் இருப்பதையும் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டத்தையும் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக வன்னி பிரதேசத்தின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் இதன் மூலம் அந்த விவசாயிகளுக்கு ஆக்கபூர்வமான பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும் இந்த பொருளாதார மையங்கள் உதவுகின்றன.

எனவே, வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இது சம்மந்தமாக ஜனாதிபதிக்கு தெரிவித்து, இயங்காமல் இருக்கும் இந்த பொருளாதார மையங்களை இயக்குவதற்கும் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தவும் உற்பத்தியாளர்களுக்கு பொருளாதார வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆட்சியை மீள திருப்புவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் இடம் இல்லை!

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க

கொழும்பு, ஜன. 16

**இடம்பெறும் சிறிய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எமது ஆட்சியை யாரும் மதிப்பிடக்கூடாது. இந்த ஆட்சியை எந்த சந்தர்ப்பத்திலும் மீளத் திருப்புவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். அத்துடன் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் பெப்ரவரியிலே ஆரம்பிக்கும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஒரு சில ஊடகங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்த நல்ல விடயத்தையும் பிரசுரிப்பதில்லை. எமது குறைபாடுகளை மாத்திரமே ஒளிபரப்பி வருகின்றன. அரசாங்கம் ஊடகங்களை அடக்குவதாக தெரிவிக்கின்றனர். நாங்கள் ஒருபோதும் ஊடகங்களை அடக்குவதற்கு முற்படப்போவதில்லை. நாங்கள் எப்போதும் ஊடகங்களுடன் சிநேகபூர்வமாக செயற்பட்டவர்கள், செயற்படுபவர்கள். இந்த ஆட்சியை எந்த சந்தர்ப்பத்திலும் மீளத் திருப்புவதற்கு இடமளிக்கக்கூடாது. இடமளிக்கவும் மாட்டோம்.

அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், சிறிய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எமது ஆட்சியை மதிப்பிடக் கூடாது. ஓட்டோ, பஸ் வண்டிகளில் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுதல் அல்லது அரிசி பிரச்னையை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை மதிப்பிட வேண்டாம்.

மேலும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி தலைமையில் நாங்கள் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். இந்த மாதம் முழுவதும் இந்த வேலைத்திட்டத்தை அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம்பெறுகிறது.

ஆனால் இலங்கை பொலிஸ், கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் ஆரம்பித்துள்ளதாக சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆனால் நாங்கள் இதனை பெப்ரவரியிலேயே ஆரம்பிக்கிறோம். தற்போது அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம் பெறுகிறது-என்றார். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் நெருக்கடி 30 கப்பல்கள் திருப்பி அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜன. 16

கொழும்பு துறைமுகத்தில் நிலவும் இட நெருக்கடி காரணமாக கடந்த இரு வாரங்களில் துறைமுகத்துக்கு வந்த 30 வரையான கப்பல்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

துறைமுகத்துக்குள் நிலவும் இடப்பற்றாக்குறையே இதற்கான பிரதான காரணமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்கலன் விடுவிப்பில் நிலவும் நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சுங்கம் மற்றும் துறைமுகங்கள் தொடர்பான சேவைகள் வழங்கும் சங்கங்களுடன் கலந்துரையாடியிருந்தார். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இவர்கள் சகலரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் அமைச்சரவை உப குழுவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கமைய, கொழும்புத் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் 459 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 242 கொள்கலன்கள் தொடர்பான பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம், சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலீ அருக்கொட தெரிவித்தார்.

இந்நிலையில், “கடந்த இருவாரங்களில் கொழும்பு துறைமுகத்துக்கு வந்த 30 வரையான கப்பல்கள் மீளத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

துறைமுக அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றிருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது” என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# இரவு நேரத்தில் சிகிரியாவை பார்வையிட அனுமதியில்லை

கொழும்பு, ஜன. 16

சிகிரியாவை இரவு நேரங்களிலும் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட இன்னும் திறக்கப்படவில்லையென புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிகிரியா இரவு நேரங்களில் மின் விளக்குகளால் ஒளிரச் செய்யப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள பதிவுகளுக்கு விளக்கம் அந்த அமைச்சு அளித்துள்ளது.

சிகிரியா இரவு நேரங்களில் மின் விளக்குகளால் ஒளிரச் செய்ய எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

சிகிரியா இரவு நேரம் பார்வையிட திறக்கப்படமாட்டாது எனவும் அது பொதுமக்களுக்கு அறிவித் துள்ளது. (அ)

# மாணிக்கக்கற்களுடன் தந்தையும் மகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஜன. 16

ஒரு கோடியே 7,450,875 ரூபாய் மதிப்புள்ள மாணிக்கக்கற்களை தமது உள்ளாடைகளுக்குள் மறைத்து வைத்து சீனாவுக்கு கொண்டு செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் சுங்க அதிகாரிகளால், சீனப் பிரஜைகளான தந்தையும் மகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.சந்தேக நபரான 45 வயது தந்தையும் அவரது 21 வயது மகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றித் திரிந்து வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மாணிக்கக்கற்களில் சந்திர காந்தி, கோமேதா, அரனுல், வைரோடி மற்றும் பச்சை ஆகியவை அடங்கியுள்ளன.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கு மோல்டா குடியரசுடன் இலங்கை பேச்சு!

கொழும்பு, ஜன. 16

மோல்டா குடியரசின் இலங்கைக்கான தூதுவருக்கும் இலங்கை ஏற்றுமதிச் சபைக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இலங்கை ஏற்றுமதிச் சபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அதன் உயர்தர தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் ஏற்றுமதி துறையை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் மோல்டா குடியரசின் தூதுவர் கருத்துரைத்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இறப்பர் சார் உற்பத்திகளில் காணப்படும் ஆர்வத்தை அவர் வெளிப்படுத்தியதாகவும் இலங்கை ஏற்றுமதிச் சபை தெரிவித் துள்ளது. (அ)

# வெளிநாட்டு பணவனுப்பல் 10.1 வீதத்தினால் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 16

2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2024ஆம் ஆண்டில் வெளிநாட்டு பணவனுப்பல் 10.1 வீதம் அதிகரித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பணவனுப்பல் 5,969.6 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது.

இந்தநிலையில், கடந்த ஆண்டில் வெளிநாட்டு பணவனுப்பல் 6,575.4 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் 530.1 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்த நிலையில், டிசெம்பர் மாதத்தில் அந்த தொகை 613.8 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# வெலே சுதா, அவரது மனைவி உட்பட மூவருக்கு 8 ஆண்டுகள் கடூழிய சிறை!

கொழும்பு, ஜன. 16

போதைப்பொருள் கடத்தல்காரர் எனக் கூறப்படும் கம்பொல விதானலாகே சமந்த குமார எனப்படும் வெலே சுதா, அவரது மனைவி மற்றும் மற்றொரு பெண்ணுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் மூலம் 17 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் மற்றும் பணம் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, நீண்ட சாட்சிய விசாரணைக்கு பிறகு விசாரணையை முடித்து வைத்த உயர் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை நேற்று அறிவித்தார்.

# தரமற்ற மருந்துகள் தொடர்பில் விசாரணை நடத்த கோரிக்கை

கொழும்பு, ஜன. 16

நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பில் பயன்படுத்தப்படும் கிட்டத்தட்ட 300 தொகுதி மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் தரமற்றவை எனக் கண்டறியப்பட்ட நிலையில், அவை குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மருந்தை கொள்முதல் செய்யும் செயல்பாட்டில் ஏதேனும் முறைகேடு நடந்ததா என்பது குறித்து விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கோரியுள்ளது.

சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த விசாரணையைக் கோரியுள்ளது.

இந்த 300 மருந்துகளில், நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட மருந்துகளும் இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனவரியின் முதல் 14 நாட்களில் 2,352 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, ஜன. 16

நாட்டில் இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தின் முதல் 14 நாட்களில் 2,352 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான நோயாளர்கள் கம்பஹாவில் பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 374 ஆகும்.அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 304 டெங்கு நோயாளர்களும், காலி மாவட்டத்தி லிருந்து 169 டெங்கு நோயாளர்களும், கண்டி மாவட்டத்திலி ருந்து 134 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.கடந்த 2024 ஆம் ஆண்டில் நாட்டில் 49,887 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்கள் பதிவாகி யுள்ளதாக தேசிய டெங்கு கட் டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கட்சிகளை பலவீனப்படுத்தும் இந்தியா!

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 16

**வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் திடீரென தோற்றம் பெற்றார். தற்போது அவரைக் காணவில்லை.

தேர்தலில் போட்டியிடுவதும், அதன் பின்னர் மாயமாவதும்தான் அவருக்குரிய ஒப்பந்தம். அவர் தற்போது அரசியலில் இல்லை. தமிழ் பொது வேட்பாளர் எதற்காக வந்தார்? யாரின் நோக்கத்தை நிறைவேற்ற களமிறங்கினார்?

கடந்த பொதுத்தேர்தல் பெறுபேறுகளை ஒப்பிட்டு பார்க்கும்போது, யாழில் வாக்குகள் சிதறியுள்ளன. தமிழ் தேசிய அரசியல் ஒரு விதத்தில் சவாலுக் குட்படுத்தப்பட்டுள்ளது. அன்று வடக்கு பிரச்னையை பயன்படுத்தியே இந்தியா நாட்டுக்குள் நுழைந்தது. இன்று அதற்கான தேவைப்பாடு இல்லை. ஏனெனில் கொழும்பு அரசு எல்லாவற்றுக்கும் உடன்பட்டுள்ளது.

இவ்வாறு தெற்கு ஊடாக இந்திய தலையீடுவரும்போது வடக்கில் எதிர்ப்பு கிளம்பும் என்பதால் தமிழ் தேசிய அரசியலையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு இந்தியாவுக்கு உள்ளது.

அர்ச்சுனா போன்றவர்களை கொண்டுவந்து என்ன செய்ய போகின்றார்கள்? -என்றார். (அ)

# ஆசிரியர்களின் இடமாற்றத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்!

## ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை

கொழும்பு, ஜன. 16

ஆசிரியர் இடமாற்றங்கள் எந்தவித அரசியல் தலையீட்டும் இன்றி நிறைவேற்றப்பட வேண்டுமென ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் மற்றும் அவற்றின் அடிப்படையில் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நிகழக் கூடாது என அவர் கூறினார். ஒரே பாடசாலையில் ஆறு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய சிலருக்கு இது வரை இடமாற்ற அறிவிப்பு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

சுமார் 5000 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில், சிலர் அதே பாடசாலைகளில் தம் பணியை தொடர முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, 40 முதல் 50 வயதுடைய ஆசிரியர்கள் தூரப் பகுதிகளில் சேவையாற்றவேண்டும் எனவும், இது கல்வி சமநிலையை நிலைநிறுத்த உதவும் எனவும் ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இடமாற்றங்கள் சாதுரியமாக நிறைவேற்றப்பட்டால், அனைத்து மாணவர்களும் சமமான கல்வி வசதிகளை பெறுவார்கள் என ஜோசப் ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார். (அ)

# மதுபான வரியை அதிகரிப்பதால் மது நிறுவனங்களுக்கே இலாபம்!

கொழும்பு, ஜன. 16

மதுவரியை அதிகரிப்பதனால் மதுபான நிறுவனங்களுக்கே அதிக இலாபம் சென்றடைவதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தால் அண்மையில் அதிகரித்த மதுவரி குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டு, அந்த மையம் இதனைத் தெரிவித்துள்ளது. மதுபானங்களுக்கான வரியை 6 வீதம் அதிகரிப்பதற்கு அரசாங்கம் கடந்த 11ஆம் திகதி தீர்மானித்துள்ளது.

அதன்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் விலை திருத்தப்பட்டிருந்தது.

அதேநேரத்தில், சிலோன் புகையிலை நிறுவனமும் சிகரெட்டுகளின் விலையை 11 வீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த வரி அதிகரிப்பு செயல்முறையானது உரிய வகையில் மேற்கொள எப்படாமையினால், வரி அதிகரிப்பின் பலன்கள் அரசாங்கத்துக்கு அல்லாது மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்தி நிறுவனங்களையும் விற்பனையாளர்களையும் சென்றடைவதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் குற்றம் சாட்டுகிறது.

சந்தையில் அதிகமாக விற்பனையாகும் சிகரெட் வகையின் மீதான வரி அதிகரிப்பு 4.51 வீதமாக இருந்தபோதிலும் அதன் விலை 10 ரூபாயினால் அதிகரித்துள்ளதாக அந்த மையம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பால் புகையிலை தொழிற்துறையினர் மேலதிக இலாபமாக சுமார் 7 ஆயிரம் மில்லியன் ரூபாய்க்கு அதிக தொகையை ஈட்டுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு ஒவ்வொரு சிகரெட் வகைக்கும் மேற்கொள்ளப்படுவதனால் அந்த நிறுவனங்களின் இலாபம் அதிகரிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக அவர்களது விளம்பரத்துக்கு அதிகம் செலவிடுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் அதனால் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் புகையிலை நிறுவனங்களுக்கு இரையாகும் வாய்ப்புகள் அதிகரிப்பதாகவும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# அநுரவுக்கு மக்கள் வாக்களித்தது ஊழலைச் சுத்தம் செய்யவே தவிர வாகன உதிரிப்பாகம் கழற்ற அல்ல!

## சரத் வீரசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 16

ஊழல், மோசடி மற்றும் லஞ்சத்தைத் தடுத்து நாட்டைச் சுத்தப்படுத்தவே நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு வாக்களித்தனர், வாகனங்களிலிருந்து உதிரிப்பாகங்களை அகற்றி சுத்தம் செய்வதற்காக அல்ல என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.



பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையான அர்த்தத்தில், தூய்மையான இலங்கை என்றால் ஊழலைத் தடுப்பது, திருடர்களைப் பிடிப்பது, லஞ்சம் வாங்குவதை நிறுத்துவது மற்றும் நாட்டைச் சுத்தம் செய்வது என்று சுட்டிக்காட்டிய அவர், ஓட்டோ மற்றும் பஸ் களை வைத்திருப்பவர்களை தேவையில்லாமல் துன்புறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த அரசாங்கம் "கிளீன் சிறிலங்கா" என்ற திட்டத்தைத் தொடங்குவதன் மூலம் இந்த நாட்டை நேர்மையான நோக்கங்களுடன் சுத்தம் செய்யத் தொடங்கியிருக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் இந்த நாட்டை சுத்தம் செய்வோம் என்று கூறி நாட்டைக் கைப்பற்றினர். இந்த நாட்டில் ஊழலைத் தடுப்பது மற்றும் மோசடியைத் தடுப்பது மற்றும் லஞ்சத்தைத் தடுப்பது என்ற அர்த்தத்தில் இந்த சுத்திகரிப்பு செய்யப்படுகிறது என்பதே இதன் பொருள். மக்கள் வாக்களித்தனர்.

அந்த குப்பை மேடுகளையும், வடிகால்களையும் சுத்தம் செய்திருந்தால், கிளீன் சிறிலங்கா நன்றாக இருக்கும். உணவகங்களின் தூய்மை குறித்து ஊடகங்களிலும் பார்த்தோம். இதையும் அந்த திட்டத்தின் மூலம் சுத்தம் செய்தால் நல்லது. நாம் அந்த முச்சக்கர வண்டிகளிலும் தனியார் பேருந்துகளிலும் நேரத்தைச் செலவிடுவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக இவற்றில் நேரத்தைச் செலவிட்டால், நாம் ஒரு தூய்மையான இலங்கையை அடைய முடியும்-என்றார். (அ)

# 2024 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை வருமானம் 53.2 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 16

2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சுற்றுலாத்துறை வருமானம் 53.2 வீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில், 1,487,303 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில், இதனூடாக பதிவு செய்த மொத்த வருமானம் 2,068 மில்லியன் டொலர்கள் ஆகும்.

2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,053,465 ஆக பதிவான நிலையில், இதனூடாக இலங்கை 3,168.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பதிவு செய்துள்ளது. இது ஆண்டு அடிப்படையில் 53.2 வீத வளர்ச்சியாகும்.

2024 டிசெம்பரில் சுற்றுலாத்துறை வருமானம் 362.1 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது.

2023 டிசெம்ப ரில் இதன் மதிப்பு 269.3 மில்லி யன் டொலர்களாக பதிவான தாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் நீதிமன்ற பணியாளர் கைது!

கொழும்பு, ஜன. 16

ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீதிமன்றப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடையில் உள்ள நீதிமன்றத்தில் கடமையாற்றும் பணியாளரிடமிருந்து 10 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த ஐஸ் போதைப்பொருளை அவர் கஹவத்த பகுதியில் விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் வெல்லம்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (அ)

## சிமெந்து விலை குறையும்

கொழும்பு, ஜன. 16

சிமெந்துக்கான செஸ் வரியை குறைப்பதற்கு நிதி அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்த யோசனைக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒரு கிலோகிராம் சிமெந்து ஒரு ரூபாவால் குறைவதுடன், ஒரு மூடை சிமெந்தின் விலை 100 ரூபாவால் குறைவதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# தரச்சான்றிதழ் அற்ற ரின்மீன்!

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் விற்பனை செய்யப்படும் ரின் மீன்களில் பாதியளவான ரின்மீன் உற்பத்திகள் எதுவித தரச்சான்றிதழ்களும் அற்றவை என தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் 28 வர்த்தக நாமங்களின் கீழ் ரின்மீன்கள் சந்தைப்படுத்தப் படுகின்றன.

இவற்றில் 15 வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே தரச்சான்றிதழ் உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுள்ளன.

அவற்றின் மூலமாக சந்தைப் படுத்தப்படும் 48 வகையான ரின்மீன்களுக்கு இலங்கை தரச் சான்றிதழ் நிறுவனத்தின் தரச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய 13 வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்களுக்கும் எதுவித தரச்சான்றுகளும் வழங்கப்படாத நிலையிலேயே அவற்றின் ரின்மீன்கள் சந்தைப்படுத்தப்படுவதாக தேசிய கணக்காய்வு நிறுவனத்தின் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி நெருக்கடி தொடர்பில் திறந்த விவாதத்துக்கு வருக!

## தேசிய விவசாய கூட்டமைப்பு அமைச்சர் வசந்தவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜன. 16

**அரிசி நெருக்கடி தொடர்பிலான திறந்த விவாதத்திற்கு வருகை தருமாறு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு, தேசிய விவசாய கூட்டமைப்பின் தலைவர் அநு ராத தென்னக்கோன் அழைப்பு விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலங்களில் இடம் பெற்ற முறையற்ற அரிசி விநியோகத்தின் காரணமாகவே சிவப்பு பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்க ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். இந்த விடயம் உண்மைக்குப் புறம்பானதாகும்.

புள்ளிவிவரங்களை காண்பித்து உண்மைப்பிரச்சினையை மூடிமைக்க எத்தனிப்பதற்கு இடமளிக்க முடியாது. இது அமைச்சருக்கும் அரசாங்கத்துக்குமான இயலாமையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது. ஆகவே அமைச்சர் வசந்த சமரசிங்க திறந்த விவாதத்திற்கு வருகை தர வேண்டும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்-என்றார். (அ)

# வில்பாத பகுதியில் உள்ள வீடு மீது துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜன. 16

களுத்துறை - தொடங்கொடை, வில்பாத பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தொடங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் ஜன்னலில் நான்கு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. களுத்துறை குற்றப் புல னாய்வு அதிகாரிகள் விசார ணைகளை முன்னெடுத்துள்ளதுடன் விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர். (அ)

# வெளிநாட்டவரிடம் இலஞ்சம் பெற்ற இரண்டு கான்ஸ்டபிள்கள் பணிநீக்கம்

கொழும்பு, ஜன. 16

மிதிகம பொலிஸ் நிலையத்தின் 2 கான்ஸ்டபிள்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுப் பெண்ணொருவரிடம் இருந்து இலஞ்சம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான கான்ஸ்டபிள்கள் கடந்த 31ஆம் திகதி வெளிநாட்டு பெண்ணொருவரிடம் இருந்து 5,000 ரூபா இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சீரற்ற காலநிலையினால் 47 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 16

சீரற்ற காலநிலையின் காரணமாக கல்ஓயாவை சேர்ந்த 47 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் தெரிவிக்கையில்-நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையின் காரணமாக பொலன்னறுவை சோமாவதி வீதி நீரில் மூழ்கியுள்ளது. இரண்டரை அடிக்கு குறித்த வீதியில் நீர் நிரம்பியுள்ளது. அதேபோன்று சீரற்ற காலநிலையின் காரணமாக கல் ஓயாவை சேர்ந்த 47 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

அந்த வகையில் நிவாரணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் பாதுகாப்பு மையங்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ரீதியில் எடுத்து நோக்கும்போது சீரற்ற கால நிலையிக் காரணமாக 135 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அநுராதபுரத்தின் ஆறுகள் பல வான்பாயும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்களை அவதானத்துடன் இருக்குமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். நீதியில் மூழ்கியுள்ள பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என கல்ஓயா மற்றும் அநுராதபுரம் பகுதியில் உள்ள மக்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். கல்ஓயாவை பார்வையிட பலர்வருகை தந்துள்ளனர்.

இத்தகைய பின்னணி யில் அவசர தேவை ஏற்படின் உடனடியாக 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்த முடியும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

# 6 ஆயிரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து 6,000 முறைப்பாடுகளை அதிகாரிகள் பெற்றுக் கொண்டுள்ளதோடு அந்நிறுவனங்களின் உரிமங்களை இடைநிறுத்தல் மற்றும் சட்ட ரீதியாக வழக்குத் தொடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகாரங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதில் அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும், பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கும் வெவ்வேறு சட்ட கட்டமைப்புகள் பொருந்தக்கூடியவையாக உள்ளன.

கடந்த காலங்களில், இரண்டு பிரிவுகளையும் சேர்ந்த நிறுவனங்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தற்போதும் நாளாந்தம் ஏராளமான முறைப்பாடுகள் கிடைகின்றன. அண்மைய காலத்தில் முறைப்பாடுகளுடன் தொடர் புடைய 6,000 நிறுவனங்க ளுக்கு எதிராக முறைப்பாடுகள் அதிகாரிகளுக்கு கிடைத்துள் ளன -என்றார். (அ)

# அஹுங்கல்ல கடலில் மூழ்கிய 2 வெளிநாட்டு பிரஜைகள் மீட்பு

கொழும்பு, ஜன. 16

அஹுங்கல்ல கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இரண்டு கஸகஸ்தான் பிரஜைகள் அஹுங்கல்ல பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

40 மற்றும் 47 வயதுடைய இரண்டு கஸகஸ்தான் பிரஜைகளே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கஸகஸ்தான் பிரஜைகள் இருவரும் நேற்று முன் தினம் மாலை அ/ஹங்கல்ல கடலில் நீராடிக் கொண்டிருந்துள்ள நிலையில் திடீரென கடலில் மூழ்கியுள்ளனர்.

இதனை அவ தானித்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் கஸகஸ்தான் பிரஜை களை காப்பாற்றி கரைக்குக் கொண்டு சென்று அவர்களுக்கு முதலுதவி அளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜே.வி.பியினர் இரட்டை வேடம் வாக்களித்த செந்தமிழர் எங்கே?

## கேள்வி எழுப்புகிறார் மனோ

கொழும்பு, ஜன. 16

"அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ மேலும் கூறியதாவது-"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்ற கருத்தைத் தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்க தரப்பு அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்க போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படி தான்.

இந்நாட்டில், 1971 இல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே ஆயுதம் தூக்கி பின்னர், 1989 இலும் ஆயுதம் தூக்கி ஜே.வி.பி போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜேவிபி போராளிகளை, அன்றைய அரசாங்கம், "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால் ஜே.வி.பியினர், "இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

2015-2019 கால நமது நல்லாட்சியிலும் இடைக்கிடை ஒரிரு அமைச்சர்கள் இப்படி சொன்னார்கள். ஆனால் அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களை கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களை புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும், வெளியே தமிழ் தேசிய கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில் மாற்று பேச்சுக்கு இடமில்லை. 1971இல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜே.வி.பி, கைதாகி சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை, அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகிறது. (அ)

# சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்ற வெளிநாட்டு பெண் திடீர் மரணம்

கொழும்பு, ஜன. 16

சிகிரியாவுக்கு சுற்றுலா சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இவர் சிகிரியாவுக்கு நேற்று முன் தினம் சுற்றுலா சென்றிருந்தபோது, ஏற்பட்ட திடீர் மாரடைப்பால் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

செக் குடியரசைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் சிகிரியா - கிம்பிஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# உர மானியம் வழங்கலில் 95 வீதமான பணி நிறைவு

கொழும்பு, ஜன. 16

உர மானியத்துக்கான நிதி வழங்கல் தற்போது 95 வீதம் நிறைவடைந்துள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரை ரூ.16,369 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் ஜெனரல் யு. பி. ரோஹண ராஜக்ஷ தெரிவித்தார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிலவரப்படி, உர மானியங்களுக்காக விவசாயிகளுக்கு 9,889 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருந்தது.

அனுராதபுரம், அம்பாறை மற்றும் குருநாகல் மாவட்டங்கள் அதிக மானியப் பணத்தைப் பெற்றுள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் யூ. பி. ரோஹண ராஜக்ஷ மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வை உடனடியாக நிறுத்த வேண்டும்

## அரச அதிகாரிகளுக்கு பிரதியமைச்சர் அறிவுறுத்தல்

திருகோணமலை, ஜன.16

**"சூழலை பாதுகாப்பதற்கு சட்டவிரோத மணல் அகழ்வு உடன் நிறுத்தப்பட வேண்டும். இந்த நடவடிக்கைக்கு ஏற்ப பொலிஸார், சுற்றாடல் அதிகார சபை மற்றும் பிரதேச செயலாளர், அரச அதிகாரிகள் இணைந்து செயலாற்ற வேண்டும்"**

-இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதியமைச்சரும், திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான அருண் ஹேமச்சந்திர அறிவுறுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"எமது நாட்டில் இனி சட்டவிரோதமாக எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெற முடியாது. இது சட்டத்தின் ஆட்சி, அரசாங்கத்தின் கொள்கையும் அதுதான்.

சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறும் இடங்களை அடையாளம் கண்டு, அது தொடர்பில் பூரணமாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊழலை ஒழிக்க வேண்டும். இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் முன்னுரிமை அடிப்படையில் இருப்பது மட்டுமன்றி அரசியலை இலக்காக கொண்டு இடம்பெறக் கூடாது"- என்றார். (எ)

# 9 வயது சிறுமிமீது பாலியல் சேட்டை

## 69 வயது முதியவர் கைது

சம்மாந்துறை, ஜன.16

9 வயது சிறுமி மீது பாலியல் சேட்டை செய்தமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனை செய்யும் நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றதுடன் கடந்த திங்கட்கிழமை இவ்விடயம் குறித்து சிறுமியின் தாயார் முறைப்பாடு ஒன்றை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டிற்கமைய குறித்த நபரை பொலிஸார் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வீரமுனை பகுதியில் வாடகை வீட்டில் தங்கி அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனை செய்பவர் எனவும் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

மேலும், பாதிக்கப்பட்ட 9 வயது சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பல்கலை. மாணவர்கள் உட்பட நால்வர் விபத்தில் படுகாயம்!

## தனியார் பஸ் சாரதி கைது

வந்தாறுமூலை, ஜன.16

தனியார் பஸ் - ஓட்டோ மீது மோதி ஏற்பட்ட விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாலுள்ள பாதசாரி கடவையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10. 45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் நால்வர் படுகாயமடைந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் 3 மாணவர்கள் செங்கலடியில் இருந்து பல்கலைக்கழக விடுதிக்கு ஓட்டோவில் பயணித்து பல்கலைக்கழகத்தின் முன்னால் உள்ள பாதசாரி கடவை பகுதியில் எதிர்பக்கமாக ஓட்டோவை திருப்பும் போது கல்முனையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டதுடன் பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசின் உலர் உணவுப்பொதிகள்

களுவாஞ்சிக்குடி,ஜன.16

இந்திய - இலங்கை 75 வருட ஆண்டு கால இராஜதந்திர உறவை முன்னிட்டு "இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்" எனும் தொனிப் பொருளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை வந்தடைந்தன.

அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் வேண்டுகோளுக்கு அமைவாக 750 உலர் உணவுப் பொதிகள் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற 142 உலருணவுப் பொதிகளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா. றேமமாலாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து இப் பொதிகளை வழங்கினர். (எ)




# ஆளுநர் தலைமையில் தைப்பொங்கல் விழா

திருகோணமலை, ஜன.16

கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தைப்பொங்கல் விழா திருகோணமலை - குச்சவெளி பிரதேச வேலூர் மிட்சு மீள்குடியேற்ற பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே. குணநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.(எ)





மட்டக்களப்பு, குருக்கள்மடம் சிறீலசிறீ செல்லக் கதிர்காம சுவாமி கோவிலில் ஆருத்ரா அபிசேக திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது.

# பாரம்பரிய செப்பு பூஜை!



காரைதீவு, ஜன.16

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு சிறீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பாரம்பரிய செப்பு பூஜை நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. (எ)

# விபுலானந்தாவின் பவளவிழா நிகழ்வு



காரைதீவு, ஜன.16

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் 75 ஆவது வருட பவள விழா நிகழ்வுகள் நேற்று கொண்டாடப்பட்டன.

அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் பொங்கல் பொங்கியும் கேக் வெட்டியும் பாடசாலையின் பவள விழா கொண்டாடப்பட்டது.

இதில், கல்முனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. சஞ்சீவன், ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ரி. வினோதராஜா, பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் எல். சுலக்ஷன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பாடசாலையின் 75ஆம் ஆண்டு நிறைவு - பவளவிழாவை (1950-2025) சிறப்பிக்கும் வகையில் பல நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய இராணுவ தளங்கள்மீது உக்ரைன் படைகள் தாக்குதல்

கீவ், ஜன.16

**ரஷ்யாவின் இராணுவத் தளங்கள் (இராணுவத்துக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் இடங்கள்) மீது மிகப் பெரிய அளவில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.**

200 கிலோ மீற்றர் முதல் 1100 கிலோ மீற்றர் வரை ரஷ்யாவின் உட்பகுதியில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இதையடுத்து பிரையன்ஸ்க், சரடோவ், டுலா மாகாணங்களில் தாக்குதல் நடத்தியதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது. சரடோவ் மாகாணத்தில் உள்ள ஏங்கல்ஸ் என்ற இடத்தில் உள்ள எண்ணெய் சேகரித்து வைக்கும் கிரிஸ்டால் நிலையம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. பிரையன்ஸ்க் மாகணத்தின் செல்ட்சோவில் உள்ள லைப்ஸ்டைல் தொழில்நுட்பம் பிரையன்ஸ்க் இரசாயன நிலையம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. (இது ரொக்கெட், குண்டுகள் தயாரிப்பதற்கான வெடிப்பொருட்களை தயாரிக்கும் வசதி கொண்ட நிலையம்) சரடோவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கசனோர்க்சின்டெஸ் நிலையம் ஆகியவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்ய இராணுவத் தளங்கள் அழிக்கப்படுவது தொடர்கிறது. இது உக்ரைனுக்கு மகிமை என இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தென்கொரியாவின் ஜனாதிபதி கைது!





சியோல்,ஜன.16

தென் கொரியாவில் பதவி நீக்கத்துக்குள்ளான ஜனாதிபதி யூன் சாக் யோல் கைது செய்யப்பட்டுள்ளார். இதை அந்த நாட்டின் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். ஜனாதிபதி மாளிகை வளாகத்துக்கு முன்பாக மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ்துறை அதிகாரிகள் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்று அதிகாலை திடீரென குவிந்தனர். இதனைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

கறுப்பு நிற வாகனங்கள் சைரனை ஒலிக்க செய்தபடி ஜனாதிபதி மாளிகை வளாகத்தை விட்டு வெளியேறின. தென்கொரியாவில் இராணுவ அவசர சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டார். இது அங்கு அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனால், ஜனாதிபதி பதவியில் இருந்து யூன் சாக் யோல் இடைநீக்கம் செய்யப்பட்டார். அவரது அதிகாரங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன.

இந்தச் சூழலில் அவரை கைது செய்ய இரண்டாவது முறையாக அதிகாரிகள் நேற்ற முயற்சித்தனர். இது தொடர்பில் ஊழல் தடுப்புப் பிரிவின் உயர்மட்ட அதிகாரிகள், ஜனாதிபதி மாளிகை அதிகாரிகளுடன் நீண்ட நேரம் பேச்சுகள் நடத்தி யூன் சாக் யோலை கைது செய்தனர்.

இராணுவ அவசர சட்டத்தை அமுல்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## அமெ. - இந்தியா உறவு தொடர்ந்து வளர்ச்சி பெறும்

மட்ரிட்,ஜன.16

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகள் பல்வேறு பரிமாணங்களில் வலுவான வளர்ச்சி அடைந்துள்ளன என்று அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையேயான நெருங்கிய உறவுகள் மற்றும் நம்மிடையேயான முந்தின பதிவுகளின் அடிப்படையில், நம்முடைய உறவு தொடர்ந்து வளரும் என்பதில் நம்பிக்கை உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் ஜோஸ் மானுவேல் அல்பாரெஸுடன் இணைந்து மட்ரிட் நகரில் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

# லொஸ் ஏஞ்சல்ஸில் தொடரும் காட்டுத்தீ

## கடும் காற்று எச்சரிக்கையால் மீண்டும் பேராபத்து அச்சம்!

லொஸ் ஏஞ்சல்ஸ்,ஜன.16

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் இன்னும் காட்டுத் தீ அணையாமல் எரிந்து வரும் நிலையில், மீண்டும் கடும் காற்று வீசக்கூடும் என்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மீண்டும் பெரிய அழிவை எதிர்நோக்கி காத்திருக்கிறது அந்த மாநகரம்.

அதேநேரத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதிகளில் உள்ள தீயணைப்பு படையினர் இரண்டு பெரிய அளவில் ஏற்பட்ட காட்டுத் தீ மற்றும் இரண்டு சிறிய காட்டுத் தீயை அணைக்கப்போராடி வருகின்றனர். நகரில் ஏற்பட்ட மிகப்பெரிய காட்டுத் தீயான பாலிசேட்ஸ் விபத்து 23,000 இற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவை எரித்துள்ளது. திங்கள் கிழமை நிலவரப்படி 14 சதவீதம் காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும், மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றின் வேகம் இருக்கும் என்றும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பேரழிவை எதிர்நோக்கியுள்ளனர். (எ)

# பணமோசடி விசாரணை அமைச்சர் இராஜினாமா

லண்டன், ஜன.16



பங்களாதேஷில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணமோசடி விசாரணைகளையடுத்து, ஹசீனாவின் மருமகளான துலிப் சித்திக் பிரிட்டனில் வகித்து வந்த அமைச்சர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

பிரிட்டனில் பிரதமர் கீர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சி செய்து வருகிறது. அவருடைய அரசில் இலஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை அமைச்சராக இருந்தவர் துலிப் சித்திக்.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமரான ஷேக் ஹசீனாவின் மருமகளான இவர், பங்களாதேஷில் நடந்து வரும் நிதி மோசடி தொடர்பான விசாரணையில் இணைக்கப்பட்டுள்ளார். இதனால், அவரிடம் விசாரணை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், சித்திக் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடகப் பதிவில், தனிப்பட்ட முறையில் நடந்த மறு ஆய்வில், நான் அமைச்சருக்கான நடைமுறையை மீறவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. நான் முறைகேடாக நடந்து கொண்டேன் என்பதற்கான எந்தவித சான்றும் இல்லை.

எனினும், அரசுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக நான் அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளேன் என தெரிவித்துள்ளார். அவர் பதவி விலகியது பற்றி பிரதமருக்கு விரிவான விளக்கத்துடன் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (எ)

# காஸாவில் போர் நிறுத்தம்?

காஸா,ஜன.16

காஸாவில் போர் நிறுத்தம், பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பான வரைவு ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்றுக்கொண்டுள்ளதாக இது தொடர்பான பேச்சுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

எகிப்து அதிகாரி மற்றும் ஹமாஸ் அதிகாரி என இருவர் இந்தத் தகவலை உறுதி செய்தனர். அமைதி பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறினார். என்றாலும் ஒப்பந்தத்தின் விவரங்கள் இறுதி செய்யப்பட்டு வருகிறது. பின்பு அவை ஒப்புதலுக்காக இஸ்ரேலிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

மத்திய கிழக்கு பகுதியில் 15 மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவரவும், அதற்கு காரணமாக அமைந்த 2023, ஒக்.7 ஆம் திகதி தாக்குதலின் போது பிடிக்கப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்கவும் அமெரிக்கா, எகிப்து, கட்டார் ஆகிய நாடுகள் தொடர்ந்து முயற்சித்து வந்தன.

ஹமாஸால் பிடிக்கப்பட்ட கைதிகளில் இன்னும் 100 பேர் காஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் 20ஆம் திகதி பதவி ஏற்பதற்கு முன்பாக போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறும் என்று அமைதி பேச்சுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (எ)

# ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை வீசி தாக்குதல்!

## இஸ்ரேல் முழுவதும் பதற்றம் நீடிப்பு

டெல் அவிவ், ஜன.16

ஏமன் மீதான குண்டுவீச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அடுத்தடுத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதால் இஸ்ரேல் முழுவதும் பதற்றம் நீடித்து வருகிறது.

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து இஸரேல் வான் தாக்குதல் நடத்தியது. தலைநகர் சனாவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப் பட்டது. இதன்படியே இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். குறிப்பாக டெல் அவிவில் உள்ள இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகத்தின் மீது ஒலியை விட வேகமாக செல்லும் ஏவுகணைகளை வீசி தாக்கினர்.

இஸ்ரேலின் ஏவுகணை இடைமறிப்பு அமைப்பால் இதைத் தடுக்க முடியவில்லை என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். 12 மணி நேரத்தில் நடந்த 3ஆவது தாக்குதல் இதுவாகும். முன்னதாக மேலும் 2 முறை மத்திய இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசியதாக ஹவுதி அறிவித்தது. இஸ்ரேலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதால் நாடு முழுவதும் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. (எ)

# தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்

துஷான்பே, ஜன.16

மத்திய ஆசிய நாடான தஜிகிஸ்தானில் நேற்று அதிகாலை 03. 55 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது, ரிக்டர் அளவில் 4.1 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

28 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால், ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக கடந்த வாரம் வெள்ளிக்கிழமை காலை 08. 21 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4. 2 ஆக பதிவானது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 435 ஓட்டங்கள் குவித்து இந்திய அணி அசத்தல்



ராஜ்கோட், ஜன.16

அயர்லாந்துக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தொடரின் கடைசி போட்டியில் இந்தியா 435 ஓட்டங்கள் குவித்தது.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 6 விக்கெட்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 116 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப் பற்றி விட்டது.

இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 435 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரதிகா ரேவால் 154 ஓட்டங்களும், ஸ்மிருதி மந்தனா 135 ஓட்டங்களும் சேர்த்தனர். இதன் மூலம் அயர்லாந்து அணிக்கு 436 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. (எ)

# ஆஸி ரென்னிஸ் தொடரில் அலெக்ஸ் அதிரடி ஆட்டம்



மெல்பேர்ன், ஜன.16

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அலெக்ஸ் டி மினார் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தத் தொடரின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், நெதர்லாந்தை சேர்ந்த போடிக் வான் டி சாண்ட்ஸ்கல்ப் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய டி மினார் 6-1, 7-5 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)

# பி. வி. சிந்து வெற்றி



புதுடில்லி, ஜன.16

இந்திய ஓபன் பட்மிண்டன் தொடரில் பி. வி. சிந்து வெற்றி பெற்றார்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் இந்திய ஓபன் சுப்பர் தொடர் பட்மிண்டன் போட்டி டில்லியில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் பி. வி. சிந்து, தாய்வானின் சங் ஷுயோ-யுன் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பி. வி. சிந்து 21-14, 22-20 என்ற செட் கணக்கில் சங் ஷுயோ-யுனை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# போபண்ணா ஜோடி வெளியேறியது



மெல்பேர்ன், ஜன.16

ஆஸி ரென்னிஸ் தொடர் முதல் சுற்றோடு போபண்ணா ஜோடி வெளியேறியது.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, கொலம்பியாவைச் சேர்ந்த நிக்கோலஸ் பேரியண்டஸ் ஜோடி, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மார்ட்டினஸ் - ஜாம் முனார் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் போபண்ணா ஜோடி 5-7, 6-7 (5-7) என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் மார்ட்டினஸ் - ஜாம் முனார் ஜோடியிடம் தோல்வி கண்டு முதல் சுற்றோடு தொடரில் இருந்து வெளியேறியது. (எ)

# ஆண்ட்ரே ரூப்லெவ் அதிர்ச்சி தோல்வி!



மெல்பேர்ன், ஜன.16

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இந்தத் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஆண்ட்ரே ரூப்லெவ், பிரேசிலின் ஜோவோ பொன்சேகாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரூப்லெவ் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் 6-7 (1-7), 3-6, 6-7 (5-7) என்ற செட் கணக்கில் பொன்சேகாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து முதல் சுற்றுடன் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# சம்பியனானது பார்சிலோனா



ஜெட்டா, ஜன.16

ரியல் மட்ரிட் அணியை 5- 2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பார்சிலோனா அணி சம்பியனானது.

சுப்பர் கிண்ணம் உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்றது. இதில் பார்சிலோனா - ரியல் மட்ரிட் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அடுத்தடுத்து கோல்கள் அடித்து அசத்தியது. ரியல் மட்ரிட் முதல் கோல் அடித்து முன்னிலை பெற்ற போதிலும் அந்த அணியால் அடுத்தடுத்து கோல்கள் அடிக்க முடியவில்லை.

முடிவில் 5 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற பார்சிலோனா கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது. இந்தத் தொடரில் பார்சிலோனா கிண்ணத்தை வெல்வது இது 15ஆவது முறையாகும்.

பார்சிலோனா தரப்பில் ராபின்ஹா 2 கோல்களும், லாமினே யாமல், ரபார்ட் லெவான்டாவ்ஸ்கி மற்றும் அலெஜான்ட்ரோ பால்ட் ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்து அணி வெற்றிக்கு உதவினர். ரியல் மட்ரிட் அணியில் எம்பாப்வே மற்றும் ரோட்ரிகோ தலா ஒரு கோல் அடித்தனர். (எ)

# இந்திய வீரர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்

மும்பை, ஜன.16

இந்திய வீரர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் பி. சி. சி. ஐ. புதிய விதிகளை அமுல்படுத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் சொந்த மண்ணில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்தது. இதனையடுத்து அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரிலும் தோல்வியை தழுவியது. இதன் காரணமாக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாமல் முதல் முறையாக வெளியேறியதுடன் 10 வருடங்கள் கழித்து பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தையும் இழந்தது. இதனால் இந்திய அணி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இந்த நிலையில், இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் இந்திய கிரிக்கெட் நிர்வாகமான பி.சி.சி.ஐ-யும் புதிய விதிகளை அமுல்படுத்தும் அதிரடி முடிவை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இனி இந்திய வீரர்கள் யாரும் முறையான அனுமதியின்றி பெரிய தொடர்களை தவிர்த்து மற்ற எவ்வித தொடர்களுக்கும் தங்களது மனைவியையோ, குழந்தைகளையோ, உறவினர்களையோ அழைத்துச் செல்லக்கூடாது என்ற புதிய விதிமுறையை வெளியிட்டுள்ளதாகவும், குறைந்தபட்சம் 14 நாட்களில் இருந்து, அதிகபட்சம் 45 நாட்கள் வரை கொண்ட எந்த தொடர்களுக்கும் பி.சி.சி.ஐ-யின் முறையான அனுமதி பெற்றே குடும்பத்தாரை அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஆகியோருடனான சந்திப்புக்களும் இதில் அடங்குகின்றன.

மிலிந்த மொறகொடவினால் நிறுவப்பட்ட பாத் பைன்டர் பவுன்டேஷன் அமைப்பானது இந்திய அரசாங்கத்துடனும், ஏனைய சிந்தனைக் குழுக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையினருடனும் நெருங்கிய பிணைப்பைப் பேணிவருவதுடன் தொடர் கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றது.

அதன்படி இவ்வமைப்பினால் கடந்த 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை முன்முயற்சிகள் நிலையமானது இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதையும், ஊக்குவிப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

அதன்படி, தற்போது இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான கூட்டிணைந்த ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளக்கூடியவகையில் இலங்கை, இலங்கை மற்றும் ஏனைய தொடர்புடைய நாடுகளை ஓரணிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் பாத் பைன்டர் அமைப்பு ஈடுபட்டு வருகிறது. (அ)

## காலநிலையை...

கலந்துரையாடல் இணையவழியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திலிருந்து ஆளுநர் மற்றும் பிரதம செயலர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

விவசாயிகள் நெல் அறுவடை காலத்தில் திடீரென ஏற்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்கள் வான்பாய்வதாக மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக உள்ளபோதும் குறைந்தளவான நீரே திறந்துவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் சுட்டிக்காட்டினார். இதேவேளை மாவட்டத்தின் சில பகுதிகளில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்திலும் சில வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன எனவும் கலந்துரையாடலின்போது மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறிய நீர்பாசனக் குளங்கள் இரண்டு உடைப்பெடுத்துள்ளதாக இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களில் 47 குளங்கள் தற்போது வான்பாய்ந்து கொண்டிருப்பதாக மாகாண நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப் படுத்தினார்.

தற்போதைய நிலையில் மழை வீழ்ச்சி குறைந்து வருவதாகவும் குளங்களுக்கான நீர் வரத்து குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கு அமைவாக இன்று மாலையிலிருந்து படிப்படியாக வான்கதவுகள் மூடப்படும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாக நெல்லை அறுவடை செய்யக் கூடிய விவசாயிகள் அதனை அறுவடை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துவதன் ஊடாக அழிவுகளைக் குறைக்க முடியும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் அதிகாரிகள் இணையவழியில் கலந்துகொண்டனர்.

(அ-02-05)

## வடமராட்சியில்...

ஸ்மாட் பே செயலியில் உள்நுழைந்து ரூபா 200 000 பணத்தை கொள்ளை அடித்துள்ளனர்.

இதே முறையில் 0774650187 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு குறித்த பிரதேசத் தின் வேம்படியைச் சேர்ந்த முதியவர் ஒருவரிடமும் நேற்று முன்தினம் ரூபா 29 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இருவரும் வங்கியில் முறையிட்டபோதும், மக்கள் வங்கியின் கணக்கு ஒன்றுக்கு பணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வங்கிக் கணக்கின் விவரம் தமது செயலியில் காட்டப்படவில்லை என்றும் கூறியுள்ளனர்.

குறித்த பெண் மருதங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முதியவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-05)

## கனேடிய...

சிறிதரனுக்குமிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்றிருந்தார்.

அண்மையில் கனடாவுக்குப் பயணமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், அங்கு கனேடியப் பிரதி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரி களைச் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

குறித்த சந்திப்புகள் தொடர்பிலும், இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும் மேற்படி சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினருக்கும், கனேடியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஒழுங்கமைக்குமாறு தூதுவரிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிய...

மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமூகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு அடுத்து இரு தரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப் பட்டன.

அபிவிருத்தியின் புதிய யுகத்துக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி ஷீ ஜிங் பிங், எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே. ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர்.

(அ)

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒற்றைத் தலைமை ஒருபோதுமே ஏற்படாது!

## திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்.சிறிகாந்தா

யாழ்ப்பாணம், ஜன. 16

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒற்றைத் தலைமை ஏற்படுத்துவது குறித்து தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை. இனிமேலும் அப்படியான தீர்மானம் எட்டப்படமாட்டாது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்தா தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவராக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நியமிக்கப்படவுள்ளார் என ஊடகங்களில் வெளியாகிய செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒற்றைத் தலைமையை நியமிக்க வேண்டும் என அண்மையில் நடந்த கூட்டத்தில் ஒரு சிலர் கருத்து வெளியிட்டனர். ஆயினும் அந்தக் கருத்து உடனடியாகவே நிராகரிக்கப்பட்டது. அவ்வாறான தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை. இனிமேலும் அப்படி ஒரு தீர்மானம் எட்டப்படமாட்டாது- என்றார்.

(அ)

# இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறப்பு



கிளிநொச்சி, ஜன. 16

நிலவும் சீரற்ற காலநிலையையடுத்து கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, மாங்குளம், கனகராயன் குளம் ஆகிய பிரதேசங்களில் பெய்து வருகிற கனமழை காரணமாக அதிகள வான நீர் இரணை மடுக் குளத்துக்கு வந்து கொண்டிருக்கிறமையால் தற்போது 36 அடி 10.5 அங்குல அளவுகளைத் தாண்டி யுள்ளதுடன், குளத்தின் 10.5 அங்குலம் வான் பாய்ந்து கொண்டிருப் பதால் குளத்தின் அனைத்து கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியி டப்படுகின்றது.

எனவே, குளத்தின் கீழ்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்தில் உள்ள கனகாம்பிகைக்குளம், வன்னேரி குளம், பிரமந்தனாறு குளம் ஆகியன வான் பாய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## 18ஆம் திகதி...

பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலம் நிரம்பு நிலையை அடைந்துள்ளது.

கிழக்கு மாகாணங்களின் முக்கிய குளங்களான சேனாநாயக்க சமுத்திரம், உன்னிச்சை , கந்தளாய்,வாகனேரி, கடுக்காமுனை, நவகிரி, வீராகொட, றுகம் குளம் போன்றன கிட்டத்தட்ட அவற்றின் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளன.

வடக்கு மாகாணத்தின் பிரதான குளங்களான இரணைமடு, வவுனிக்குளம், முத்தையன் கட்டு, கணுக்கேணி, தண்ணிமுறிப்பு போன்றன தற்போது மேலதிக நீரை வெளியேற்றுகின்றன.

இந்த சூழ்நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கிடைக்கும் கன மழை பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தாழ்வான பகுதிகளிலும், குளங்களின் மேலதிக நீர் வெளியேறும் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள மக்களும் இந்நாட்களில் மிக அவதானமாக இருப்பது அவசியம்.

முன்னரே குறிப்பிட்டபடி இன்றும் நாளையும் மழை சற்று குறைவாக இருக்கும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாயிகளே உங்கள் நிலையை எண்ணி மிகவும் வேதனையடைகின்றேன். உங்களுக்காகவேனும் இந்த பெரு மழை பொய்த்து போக வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன் - என்றுள்ளது. (அ)

## சர்வமத...

அடிகளாரும், மௌலவி அஸ்லமும் இணைந்து சிறப்பித்தனர்.

யாழ்.மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இன மத பாகுபாடின்றி ஒரே குடும்பமாக இணைந்து பொங்கல் பொங்கினர்.

நிகழ்வின் இறுதியில் யாழ். மாவட்ட சர்வமதக் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலை யாழ்.மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஜென்சி வசதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-02-05)

## தமிழக...

தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்து நீதிமன்ற காவலில் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

மீனவர்களின் விளக்கமறியல் காலப்பகுதி நேற்றுடன் நிறைவடைந்ததை தொடர்ந்து ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி நளினி சுபாஷ்கரன், 6 மீனவர்களும் இலங்கை கடற்பகுதிக்குள் மீண்டும் மீன்பிடித்தால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்தும், விசைப்படகு ஓட்டுநர்களான 2 பேருக்கு தலா ஒன்பது மாதம் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

பின்னர் விடுதலை செய்யப்பட்ட 6 மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# எதேச்சதிராகப் போக்கில் நடக்கும் தமிழக மீனவர்கள்

## தமிழகத்தில் அமைச்சர் சந்திரசேகர்



சென்னை, ஜன. 16

**தமிழக மீனவர்கள் எதேச்சதிகார போக்கில் இலங்கையின் கடல் வளங்களைச் சூறையாடுகிறன்றனர். அதனை தடுப்பதற்கே அரசாங்கம் சட்டத்தைக் கடுமையாக்கியுள்ளதுடன், கைதுகளையும் மேற்கொண்டு வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

அயலக தமிழர் மாநாட்டில் கலந்துகொள்ள தமிழகம் சென்றிருந்த அமைச்சர் சந்திரசேகரன் தமிழக ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்-

தமிழக மீனவர்களால் ஆந்திரா, கேரளா, குஜராத் அல்லது பாகிஸ்தான் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட முடியுமா?. ஆனால், இலங்கை கடல் பரப்பில் மாத்திரம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதுடன், எதிர்கால தலைமுறையின் கடல்பரப்பையும் சூறையாடுகின்றனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு அனுப்பும் கடிதத்தில் தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயல்பாடுகள் குறித்து குறிப்பிடுவதில்லை. யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதுதான் ஓரளவு மீண்டெழும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் சுரண்டப்படும்போது அவர்களால் அடுத்தகட்டமாக என்ன செய்ய முடியும்?

ட்ரோலர் படகுகள் மற்றும் சுருக்கு வலைகளை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும் அதனையே தொடர்ச்சியாக பயன்படுத்துகின்றனர். ஒரு சில மீனவர்கள்தான் இவ்வாறு செயல்படுகின்றனர். தமிழக மீனவர்கள் எதேச்சதிகாரப் போக்கில் இலங்கையின் கடல்வளங்களை சூறையாடுகின்றனர். இந்த செயல்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழக முதல்வரிடம் நாம் கோருவது ஒன்றுதான். பொட்டம் ட்ரோலிங் முறைமை எனப்படும் ட்ரோலர் படகுகளில் சட்டவிரோதமாக மீன்பிடியில் தமிழக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த முறையை தடை செய்ய வேண்டும். இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி முறை தடைசெய்யப்பட்டுள்ளது. எமது எதிர்கால சந்ததியினருக்கு கடல்வளத்தை பாதுகாத்து கொடுக்க வேண்டும். அதனையே இந்தியாவிடமும் தமிழக முதல்வரிடமும் கோருகிறோம் - என்றார். (அ)

# வலதுசாரிக் கட்சிகளை இணைப்பதற்குப் பேச்சு

## சஜித் தரப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

அனைத்து வலதுசாரிக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

தலைவர் யார் என்பது முக்கியமில்லை, ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி மிகப்பெரிய எதிர்க்கட்சியாக இருப்பதால், ஐக்கிய மக்கள் சக்திக்கு அதில் பெரும் இடம் இருக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தி தற்போது 40 இடங்களை பாராளுமன்றத்தில் வைத்திருக்கிறது, இதன் அடிப்படையிலேயே அனைத்து விடயங்களும் நடக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மாவோ சேதுங் நினைவிடத்தில் ஜனாதிபதி அநுர நேற்று அஞ்சலி!



கொழும்பு, ஜன. 16

சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகர் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அஞ்சலி செலுத்தினார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார நேற்றுக் காலை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர், சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகர் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்துக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டனர். (அ)

# இந்திய மீனவர்கள் பிரச்னைக்கு புதிய அணுகுமுறையுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 16

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்காக மீண்டும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

இலங்கை கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடித்தலை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அதிகாரிகளுடன் ஒரு உடன்பாட்டை எட்டுமாறு பல மீன்பிடி தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தென்னிந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதோடு சட்டவிரோத உபகரணங்களையும் பயன்படுத்துகின்றார்கள். இதனை இலங்கை மீனவர்கள் எதிர்க்கின்றார்கள். அத்துடன் இந்த நடைமுறைகள் இந்தியப் பெருங்கடலின் கடல் வளங்களுக்கும் தீங்கு விளைவிப்பதால் இரு தரப்பினருக்குமே பாதிப்புக்கள் ஏற்படுகிறன.

இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்தியத் தரப்பும் தயாராக உள்ளது. தொடர்ச்சியான பேச்சுக்களின் அடிப்படையில் விடயங்களை முன்னெடுப்பதற்கு நாமும் தயாராகவே உள்ளோம். ஆனால் அடுத்து வரும் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட அணுகுமுறையுடன், இந்திய அதிகாரிகளுடன் விரிவான இருதரப்பு பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது கூட இந்த விவகாரம் குறித்து இந்திய அரசாங்கத்துக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அது மட்டும் போதாது. எனவே, இந்திய அதிகாரிகளுடன் இரு தரப்பு பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

ஒரு நாடாக தனியாக நடவடிக்கைகளை எடுப்பதை விட, ஒரு இராஜதந்திர அணுகுமுறை மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் - என்றார். (அ)

# இவ்வாண்டுக்குள் சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை

கொழும்பு, ஜன. 16

இவ்வாண்டுக்குள் சிவப்பு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புகள் எதுவும் இல்லை என வர்த்தக, வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

சந்தையில் ஏற்பட்டுள்ள சிவப்பு அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

2025ஆம் ஆண்டில் 161,067 ஹெக்ரேயர் சிவப்பு நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன் பெரும் போகத்தில் 648,216 ஹெக்ரேயர் நெல் அறுவடை எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், சராசரி நெல் அறுவடையானது ஹெக்ரேருக்கு 4,000 கிலோகிராம், ஆகவே, சிவப்பு அரிசி பற்றாக்குறையாவதற்கு எந்த காரணமும் இல்லை என அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுக்குள் சிறு மற்றும் பெரும் போகங்களில் 277,315 ஹெக்ரேயர் சிவப்பு நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 1.1 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை கிடைக்கும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விசேடமாக, சிவப்பு அரிசி மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை போன்று தெற்கு பிரதேசங்களில் மற்றும் கிழக்கு மாகாணத்தில் பயிரிடப்படுகின்றது.

சிவப்பு அரிசி விளைச்சல் காணப்படும் பிரதேசங்களில் நெல் ஆலை களஞ்சியசாலைகள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் கடந்த அரசாங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் காரணமாக இந்த நிலை உருவாகியுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

# அமைச்சுக்களின் பங்களாக்களை வாடகைக்கு கோரும் நிறுவனங்கள்

கொழும்பு, ஜன. 16

அமைச்சு பங்களாக்களை வாடகைக்கு எடுப்பதற்காக சுமார் 10க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல அரச நிறுவனங்களும் , பல நீதிபதிகளும் இந்த வீடுகளுக்கான கோரிக்கைகளை இதற்கு முன்னர் சமர்ப்பித்திருந்தனர்.

இருப்பினும், அமைச்சர்களுக்கான பங்களாக்கள் மற்றும் ஜனாதிபதி பங்களாக்கள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தற்போது அவற்றின் மதிப்பை மதிப்பிட்டு வருவதாக பொது நிர்வாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

குறித்த மதிப்பீட்டின் பின்னர் அந்த பங்களாக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் தெரிவிக்கப்படும் எனவும் அமைச்சு பங்களாக்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ள வெவ்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அந்த கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை பரிசீலிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதிக்காக 9 பங்களாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கண்டி, நுவரெலியா, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிபிட்டிய, பெந்தொட்டை மற்றும் மஹியங்களை ஆகிய பிரதேசங்களில் குறித்த ஜனாதிபதி பங்களாக்கள் காணப்படுகின்றன.

சில அமைச்சு பங்களாக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்து காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றை புனரமைப்பதில் நிதித் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org